**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 895/2017 |
| நாள் | 23.03.2026 |
| வா.சா.1 | பாலகிருஷ்ணன் |
| வயது | 60 |
| ஊர் | தோரணக்கல்பட்டி, கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதியின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு தெரியாது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. ஆனால், லாரி வைத்திருந்தார். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறப்படும் சமயத்தில், பிரதிவாதி 9 லாரிகள் வைத்திருந்தார் என்று சொன்னால், சரிதான். பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்ததாக கூறப்படும் சமயத்தில், பிரதிவாதிக்கு காக்கவாடி கிராமம், செல்லாண்டிபாளையம் கிராமம், கொடையூர் கிராமம் ஆகிய கிராமங்களில் அசையா சொத்துக்கள் இருந்தது என்று சொன்னால், சரிதான். என்னிடம் காட்டப்படும்(வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து) வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது கிடையாது. பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில், நான் மாவு மில் வைத்திருந்தேன் என்று சொன்னால், சரிதான். என்னிடத்தில் காண்பிக்கப்படும் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் பிரதிவாதிக்கு தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வைத்திருந்த மாவு மில்லின் பெயர் கே.எம். மாவுமில் என்றால், சரிதான். கடந்த 2006ம் வருடத்தில் இருந்து மாவு மில் வைத்திருந்தேன் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த பத்திரம் நானும், பிரதிவாதியின் தாயாரும் மாவு மில் வைப்பததற்காக செய்துக்கொண்ட ஒப்பந்தம் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. கடனுறுதிச்சீட்டை பூர்த்தி செய்தவர் என்னுடைய மகன் மோகன்ராஜ் என்றால்,

சரிதான். எனது வழக்குரையிலும், நிரூபண பிரமாண வாக்குமூலத்திலும் தாவா கடனுறுதிச்சீட்டை எனது மகன் மோகன்ராஜ் என்பவர் தான் பூர்த்தி செய்தார் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். நான் மாவு மில்லை சுமார் 10x10 அறையில் வைத்திருந்தேன் என்றால், சரிதான். பிரதிவாதியின் தாயார் என்னுடைய உறவினர் என்றால், சரிதான். நான் பிரதிவாதியின் தாயாருக்கு உறவுமுறை இல்லை என்றால், சரியல்ல. பொதுவாக,ஒரு இடத்தை வாடகைக்கு விடும்போது ஒரு எழுத்துபூர்வமான ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டு தான் வாடகைக்கு கொடுப்பார்கள் என்றால், சரிதான். என்னிடம்காட்டப்படும் உறுதிமொழி ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. தாவா கடன் தொகைக்கு முன்பாக, நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளேனாஎன்றால், இல்லை. கம்பு, கேழ்வரகு, சோளம்,மிளகாய் பொடி அரைக்கும் சிறிய மாவு அரைக்கும்இயந்திரத்தை வைத்து தொழில் செய்து வந்தேன் என்றால், சரிதான். நான்பிரதிவாதிக்கு கடந்த 24.02.2016 ம் தேதியன்று கடன்கொடுத்தேன். மேற்படி தேதிக்கு 3 நாட்களுக்கு முன்பாக பிரதிவாதி என்னிடம் கடன்கேட்டார். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டபோது, என்னிடம் தொகை இருப்பில் இருந்தது. நான் 3 நாட்கள் கழித்து வந்து பிரதிவாதியை கடன் தொகையை பெற்றுச் செல்லுமாறு கூறினேன். மாவு அரைக்கும் தொழிலை தவிர்த்து, வேறு தொழில்கள் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. விவசாயம் செய்து வருகிறேன். எனது மாமானார் பெயரில் உள்ள சொத்தில் நான் விவசாயம் செய்து வருகிறேன். 2016 ம் வருடத்தில் ரூ. 7,00,000 என்பது ஒரு மிகப்பெரிய தொகை என்றால், சரிதான். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறப்படும்போது, பிரதிவாதியின் பெயரில் உள்ள அசையா சொத்துக்கள் ஆவணங்கள் நான் பொறுப்புறுதிக்காக பெறவில்லை என்றால், சரிதான். எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தாந்தோணி மலை கிளையில் வங்கி கணக்கு உள்ளது. நான் தாவா கடன் தொகையை ஒரு மாத காலம் கையிருப்பில் தான் வைத்திருந்தேன். நான் ரூ.7,00,000 ஒரு மாதம் கையிருப்பில் வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனக்கு எந்த வருமாணத்தின் அடிப்படையில் ரூ. 7,00,000 வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். விவசாயத்தில் இருந்து வருமானம் வந்தது. விவசாயத்தில் இருந்து வருமான வந்ததாக கூறுவது இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம அளிக்கிறேன்

என்றால்,சரியல்ல. நான் வருமான வரி செலுத்தவில்லை. நான் மாவு மில்லை கரூர் மாவட்டம், கரூர் வட்டம் ,தோரணக்கல்பட்டி கிராமம், செல்லாண்டிபாளையம், கதவு எண். 22/5, அம்மன்நகர், 6 வது குறுக்கு தெரு, என்ற முகவரியில் வைத்திருந்தேன் என்றால், சரிதான். மேற்படி முகவரியில் வைத்து தான் தாவா கடனுறுதிச்சீட்டு தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. மாவு மில் இடமாற்றம் செய்தபின்பு தாவா கடனுறுதிச்சீட்டு தயார் செய்யப்பட்டது. நான் மாவு மில்லை எப்போது இடமாற்றம் செய்தேன் என்று தற்போது நியாபகமில்லை. நான் இடமாற்றம் செய்த 6 மாத காலத்தில் தாவா கடனுறுதிச்சீட்டு எழுதப்பட்டது. நான் கடந்த 24.02.2016 ம் தேதியன்று காலை 8.30 மணிக்கு பிரதிவாதிக்கு தாவா கடன்தொகையை கொடுத்தேன். நான் கடனுறுதிச்சீட்டை வைத்திருந்தேனா என்றால், இல்லை. பிரதிவாதியை கடனுறுதிச்சீட்டு வாங்கி முத்திரைவில்லை ஒட்டி கொண்டுவரும்படி கூறினேன். தாவா கடனுறுதிச்சீட்டு என்ன நிற மையினால் எழுதப்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால், சரிதான். தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய போது, 1. கோபால் சாமி 2. சின்னப்பன் மகன்வேலுசாமி 3. மோகன்ராஜ் மற்றும் நான் ஆகிய நால்வரும்அங்கு இருந்தோம். ராயனுரில் உள்ள என் வீட்டில் வைத்து கடன் தொகையை கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு ரூ.500 நோட்டுகளாக கடன்கொடுத்தேன். ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 த்தை என் வீட்டில் வைத்து கடனாக கொடுத்தாக கூறுவது முற்றிலும் பொய் என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி 2 கையொப்பம் செய்தார். பிரதிவாதி இடது கைரேகை ஒன்று மட்டும் வைத்திருந்தார். ரேகை வைக்கும் பெட்டி என் வீட்டில் இருந்தது. தாவா கடனுறுதிச்சீட்டை எழுதுவதற்கு எனது ஊரில் வசிக்கும் நபர்களை நான் அழைக்கவில்லை. பிரதிவாதி கடந்த 10.01.2011 ம் தேதியன்று ரூ.1,00,000 மட்டும கடன் வாங்கியிருந்தார் என்றும், அந்த கடன்தொகைக்கு ஈடாக கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிச்சீட்டை பொறுப்புறுதிக்காக கொடுத்திருந்தார் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி வாங்கிய மேற்படி கடன் தொகையை கடந்த 31.03.2012 ம் தேதியன்று வட்டியுடன் சேர்த்து ரூ.1,04,800 பிரதிவாதி எனக்கு கொடுத்துவிட்டார் என்று சொன்னால், சரியல்ல. நான் மேற்படி கடன் தொகையை வட்டியுடன் பெற்றுக்கொண்ட போது, பிரதிவாதிக்கு உறுதிமொழி ஆவணம் ஒன்றை

எழுதிக்கொடுத்தேன் என்றால், சரியல்ல. நான் பிரதிவாதியின் தாயாருக்கு வாடகை ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு, தற்போது இவ்வழக்கிற்காக வாடகை ஒப்பந்தத்தின் அசல் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கடந்த 2016 ம் வருடம் நான் மாவுமில்லை காலி செய்துவிட்டேன் என்றால், சரிதான். நான் 2016 ம் வருடம் மாவு மில்லை காலி செய்து விட்டு, பிரதிவாதி 2011 ம் வருடம பொறுப்புறுதிக்காக கொடுத்து வைத்திருந்த கடனுறுதிச்சீட்டை பூர்த்தி செய்து, பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக அசல் வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ. 7,00,000 கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி, வாய்ப்பு இல்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டை நானும், எனது மகனும் கூட்டுசேர்ந்து பொய்யாக தயார் செய்தோம் என்றால்,சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.